

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “முதல்வர் மருந்தகம்” என்னும் புதிய திட்டத்தை காணொலி மூலமாக திறந்து வைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டம்,காட்பாடியில் முதல்வர் மருந்தகத்தை கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் அரசு அதிகாரிகள், ஒன்றிய, கழக, பகுதி கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை நகரில் நடைபெற்று வரும் தூய்மை அருணையின் பணிகளை பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். உடன் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன் மற்றும் இல. குணசேகரன், துரை.வெங்கட், அ.கோவிந்தன் உட்பட பலர் உள்ளனர்.

### சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் – குறைகள் கண்டறிவதிலும்

# தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!



சென்னை, பிப்.25-

சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் - குறைகள் கண்டறிவதிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் அறிவிக்கையின்படி தமிழ்நாடு அரசு ஒரு தற்சார்பற்ற சமூக தணிக்கைச் சங்கத்தினை தோற்றுவித்து 2012-2013 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இச்சங்கத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், பயிற்சி பெற்ற மாவட்ட / வட்டார / கிராம வள பயிற்றுநர்கள் சமூக தணிக்கை நடத்துவர். சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது ஆகும்.

சமூக தணிக்கையினை முறையாக நடத்துவதிலும், குறைகள் கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதிலும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் சமூக தணிக்கைகள் முடிந்தவுடன், தயார் செய்யப்பட்ட சமூக தணிக்கை அறிக்கைகள் சிறப்பு கிராம சபைகளில் பொது மக்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இவை அனைத்தும் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆகும். பின்னர் இப்பத்திகள் ஒவ்வொன்றின் மீதும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படும். அனைத்து சமூக தணிக்கை பத்திகளையும் ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உயர் மட்டக்குழுவில் முடிவு செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட வேண்டிய தொகை இறுதி செய்யப்படும்.

பின்னர் அத்தொகை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டு உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படும்.

சமூக தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட 2012-13ம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளின் சமூக தணிக்கை அறிக்கைகளின் படி மொத்தம் ரூ.291.46 கோடி நிதி இழப்பீடு எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அளவில் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டும். ஏற்புடைய பத்திகள் கண்டறியப்பட்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழுவில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.105.35 கோடி என முடிவு செய்யப்பட்டது. பின்னர் அரசின் தீவிர முயற்சியின் மூலம் இதில் ரூ.98.26 கோடி தொகை வசூல் செய்யப்பட்டு அதாவது 93 சதவிகிதம் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-25ஆம் ஆண்டிலும், சமூக தணிக்கை நடைபெற்று, 79,122 குறை பத்திகள் என இதுவரை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 30.198 பத்திகள் நிதி இழப்பீடு பத்திகள் எனவும், அதற்கான தொகை ரூ.14.07 கோடி எனவும், மீதமுள்ள 48,924 பத்திகள் நிதி இழப்பீடு இல்லாத சாதாரண பத்திகள் எனவும் அறிக்கை பெறப்பட்டது.

இப்பத்திகள் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்பட்டும், ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் உயர்மட்டக் குழுவில் 6,437 பத்திகள் மற்றும் ரூ.204 கோடி நிதி இழப்பீடு என முதற்கட்டமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதில் வசூல் செய்யப்பட வேண்டிய பத்திகளாக 6215 பத்திகளும் நிதி இழப்பீடு தொகையாக இதுவரை ரூ.1.94 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை குறித்து உயர்மட்டக்குழுக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட சீரிய முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இது மாநில அளவில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

மேற்படி நிதி இழப்பீடு தொகை ரூ.194 கோடியில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து ரூ.193 கோடி வசூல் செய்யப்பட்டு அரசின் தலைப்பில் கட்டப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்படி முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பத்திகளின் மீதும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு -அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட்டுள்ளார்.

### கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியத்தில்

# கழகத் தலைவர் பிறந்த நாள் - மாலை நேர கருத்தரங்கம்!

## சி.கோபி தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

வேலூர், பிப். 25-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் கெம்மங்குப்பம் கிராமத்தில், முரசொலி தமிழ் மன்றம் (ம) கிளை கழகங்களின் சார்பில், கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாலை நேர கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை செயலாளரும், முரசொலி தமிழ் மன்ற நிறுவனர் கே.வி.குப்பம் சி. கோபி தலைமை தாங்கிட ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா. முருகேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.தயாளமூர்த்தி, விடி.சிவக்குமார், தலைமைக் கழக பேச்சாளர்களான, வழக்கறிஞர் செல்வி வான்மதி, பாடகர் எஸ் மணி, பழ இராசேந்திர பிரசாத், மாவட்ட மருத்துவரணி தலைவர் டாக்டர் தி.அ.முகமது சயீ, ஆகியோர் கருத்துரை வழங்கினர். கிளையின் செயலாளர் சி. இரமேஷ் வரவேற்றார்.

ஒன்றிய துணை செயலாளர் ஏழ்மைநாதன், மாவட்ட பிரதிநிதிகள், கோ. இளங்கோ, கே.குப்பன், சி.மார்க்கபந்து, மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர் மரு. கோவி.தூயவன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ். மோகன், தொழில் அணியைச் சேர்ந்த இரா. முரளி, கா.சுரேஷ் ஆசிரியர் இரவிச்சந்திரன், வி.எத்திராசன், பனிமனை சி. மதியழகன், சேத்துவண்டை இரா.சத்தியா , எஸ்.டி. இரகு. மாணவரணி கரு. சிரிதர், இளைஞரணி ஆர் ராஜாசிவ்காந்தி, எஸ்.என். சாமுவேல், சே. வண்டை. திருஞானம்

கிளையின் நிர்வாகிகள், கெ. அருள், சி.மார்க்கபந்து, ர.சண்முகம், சி. இளங்கோவன், கோ.தயாநிதி இள.நவீன்குமார் (பி.எல்.ஏ2,) மா.சத்தியசீலன், மார்கு கவியரசன், தமிழ் வேந்தன், சிந்தனை செல்வன், சூரிய நிலவன், மகளிரணி ஏகராணி, அருள்வி ஜயா, வாசுகி, வசந்தி, பானுமதி, உஷா, ஆகியோர் கலந்துகொண்டார். அனைவருக்கும் தென்னமர கன்றுகள், கழக காலண்டர்கள் வழங்கப்பட்டன. கோவி.அழகிரி நன்றி கூறினார்.





இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் மாந்தாங்கல் பகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் பொதுமக்களுக்கு மருந்துகளை குறைந்த விலையில் கிடைக்க செய்யும் வகையில் “முதல்வர் மருந்தகத்தை” கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டைஆர்.காந்தி திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஜே.யு. சந்திரகலா, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஊராட்சிஒன்றிய குழுத்தலைவர் சேஷாவெங்கட ரமணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவு 2025–ஐ

# முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, பிப்.25-

**“வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவை முற்றிலுமாக திரும்பப் பெற வேண்டும்” என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23-02-2025), வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**“சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் விளக்கு” - பேரறிஞர் அண்ணா!**

வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவு 2025 என்பது சட்டத் துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.

முதலில், NJAC வழியாக நீதிபதி நியமனங்களை அபகரிக்க முயன்றது, பின்னர் நீதிபதி நியமனங்கள் மற்றும் பணியிட மாற்றங்களில் கொலீஜியத்தின் பரிந்துரைகளைப் புறந்தள்ளியது என 2014 முதல், ஒன்றிய பா.ஜ.க. அரசானது அமைப்புரீதியாக நீதித்துறையின் சுதந்திரத்தைச் சிதைத்து வருகிறது. தற்போது பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டைத் தன் கையில் எடுத்துக் கொள்ள முயல்வது மூலம் சட்டத் தொழிலின் தன்னாட்சியைப் பறித்து, நீதித்துறையின் சுதந்திரத்தையே பலவீனப்படுத்தப் பார்க்கிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலின் பெயரை, மெட்ராஸ் பார் கவுன்சில் என மாற்ற நினைப்பதன் மூலம் பா.ஜ.க.வுக்கு தமிழ் மேல் உள்ள வெறுப்பு இந்தச் சட்டவரைவிலும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. தமிழ்நாடு வெறும் பெயரல், அது எம் அடையாளம்!

தன்னியல்பாக வெடித்த போராட்டங்களாலும், கடும் எதிர்ப்புகளாலும் தற்போது இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறும் நிலைக்கு ஒன்றிய அரசு தள்ளப்பட்டுள்ளது. எனினும், இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, புதிய வடிவில் கொண்டு வரப்படும் என்பது கண்டனத்துக்குரியது ஆகும்.

இந்தச் சட்டவரைவை முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும், சட்டத்தொழிலின் தன்னாட்சியை மதிக்க வேண்டும் என ஒன்றிய அரசைத் தி.மு.க. வலியுறுத்துகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### திருவண்ணாமலை மாநகரில்

# பக்க கால்வாய்களை சீரமைக்க புதிய திட்டம்!

## எ.வ.வேலு தூய்மை அருணை பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

திருவண்ணாமலை, பிப். 25-

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். பொது மக்களிடம் பேசும்போது கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், சீரமைக்க புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

23.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00மணிக்கு, திருவண்ணாமலை நகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு வார்டு எண்4ல், மத்தலாங்குளத் தெருவில் மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டும், அங்குள்ள மண்மேடுகளை அகற்றிடவும், பொதுப்பணித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.15மணிக்கு, வார்டு எண்.8ல், சின்னக்கடைத் தெருவில் உள்ள வடவீதி சுப்பிரமணியர் கோயிலில் தூய்மை அருணை சார்பில் நடைபெறும் தூய்மைப்பணிகளை பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.5, புதுவாணியங்குளத் தெருவில் மரக்கன்றுகள் நட ஆலோசனைகள் வழங்கியும், நடைபெற்று வரும் கால்வாய் தூர்வாரும் பணியையும் பார்வையிட்டார்.

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.1 போளூர் ரோடு பகுதியில் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்வையிட்டும், மரக்கன்றுகள் பராமரிப்பையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 8.00மணிக்கு, வார்டு எண்.6 புதுத் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு புதர்மேடுகளை அகற்றுதல்,

காலை 8.15மணிக்கு, வார்டு எண்.2 அம்பேத்கர் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் தூர்வாரும் பணி,

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.9 காந்தி நகர் பகுதியில் நடைபெறும் கால்வாய் தூர்வாரும் பணியும், மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியினையும் பார்வையிட்டும்,

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.21 அஜிஸ் காலனி பகுதியில் நடைபெறும் கால்வாய் தூர்வாரும் பணியும், மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியினையும் பார்வையிட்டும், பொதுப்பணித்துறை அமைச்சரும், அமைப்பாளருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கினார். ஆய்வின்போது பொதுமக்களிடம் கால்வாய் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிடவும், புதியதாக பக்க கால்வாய்களும் அமைக்கப்படவுள்ளது என்று கூறினார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா. ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம். பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வர் மருந்தகத்தினை காணொலி காட்சி வாயிலாக நேற்று (24.02.2025) திறந்து வைத்ததை தொடர்ந்து, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிஞ்சிப்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முதல்வர் மருந்தகத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் கோகிலா குமார், துணைத்தலைவர் ராமர், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் வ.சி.கோமதி, துணைப் பதிவாளர் வெ.துரைசாமி உட்பட பலர் உள்ளனர்.